

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சென்னையில் நடைபெற்ற மு.க.முத்து அவர்களின் பேத்தியும், அறிவுநிதி அவர்களின் மகளுமான மாதுல்யா நிதி – டாக்டர் சாய்ராம் ஆகியோரது திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்பட இருவீட்டாரின் குடும்பத்தினர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் நிருவாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் நிருவாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் நிருவாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் என். சுப்பையன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் நிருவாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக, வள்ளுவர் கோட்டத்தில் 'சென்னை முற்போக்கு புத்தகக் கண்காட்சி 2025' நடைபெற்று வருகிறது. 14.11.2025 நேற்று மாலை நேர நிகழ்ச்சியாக, கலைமாமணி முனுசாமி அவர்களின் பாப்பம்பாடி ஜமா குழுவினரின் 'திருவண்ணாமலை பெரிய மேளம்' கலை நிகழ்ச்சியும், 'கருப்பு சிவப்பு நீலம் கைகோர்க்க வேண்டிய காலம்' என்னும் தலைப்பில்,தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆதவன் தீட்சண்யா அவர்களின் உரைவீச்சும் நடைபெற்றன. வாசகர்களும் பொதுமக்களும் ஆர்வத்துடன் பங்கேற்று நிகழ்ச்சிக்கு வரவேற்பளித்தனர்.



நேற்று (14.11.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியினை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு மீனவர் நல

# வாரியத் தலைவராக ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 15 -

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், புதிய உறுப்பினர்களை நியமித்து அரசு உத்தரவு அளித்துள்ளது. தமிழகத்தில் மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடும் மீனவத் தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களது நலனை பேணும் பொருட்டும், கடந்த 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைக்கப்பட்டது.



உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளபடி அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை இரண்டாண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

மேற்படி நியமனம் செய்யப்பட்ட, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பர்.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவராக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அலுவல் சாரா உறுப்பினர்கள்: ஏ. தாஜுதீன், என்.ஜெ. போஸ், பி. அந்தோணி ஸ்டாலின், ஏ. ஜோஸ், வி. செல்வபாரதி, ஆர்.வி. கணேஷ், ஏ.பி. பன்னீர்செல்வம், எம். முருகன், எக்ஸ். லெனின், கோ. மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பி.எஸ். ஜேசுராஜ் (எ) ராஜா, ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் செயலர் என்ற முறையில் நல வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பார். இந்நல வாரியம் முதல் தரமான குழுவாகக் கருதப்படும். அலுவல் சாரா உறுப்பினர்களின் அகவிலைப்படி மற்றும் பயணப்படி போன்றவற்றிற்கு வாரியத்தின் உறுப்பினர் செயலரால் ஒப்பளிக்கப்பட வேண்டும். வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் அரசு பதவிகளில் இருந்தால், அவர்கள் நல வாரியத்திலிருந்து ஏனைய பயன்பாடுகளை பெறமுடியாது.



## தி.மு.க.

## இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, சிவகங்கை மாவட்டத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அங்கு இன்று அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு :

**15.11.2025 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 9:45 மணி | கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சி | கோவிலூர், சிவகங்கை. |
| காலை 11:20 மணி | சிங்கம்புணரி பேரூராட்சி அலுவலகத் திறப்பு விழா | சிங்கம்புணரி, சிவகங்கை. |
| காலை 11:50 மணி | சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு சிலை திறப்பு விழா | கிருங்காக்கோட்டை, சிவகங்கை. |
| மதியம் 12:20 மணி | கழகக் கொடியேற்றி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் – முன்னாள் அமைச்சர் மாதவன் சிலைகள் திறப்பு விழா | சிங்கம்புணரி, சிவகங்கை. |
| மதியம் 1:25 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | சிங்கம்புணரி, சிவகங்கை. |
| மாலை 4:45 மணி | முன்னாள் அமைச்சர் மாதவன் சிலை திறப்பு & அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | பாரிவள்ளல் மேல்நிலைப் பள்ளி, சிங்கம்புணரி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14.11.2025

கலைஞர் 100
1924 - 2023

